**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED CLUSTER MINES (2 NOS) OF GREY GRANITE QUARRIES NAMELY M/S. ZAK EXPORTS GREY GRANITE QUARRY, S.F.NO. 380/1 (PART), LEASE OVER AN EXTENT OF 3.50.0 HA LOCATED AT CHENDARAPALLI VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT AND 2) THIRU. MIR TAHAR ALI GREY GRANITE QUARRY, S.F.NO. 380/1 (PART), LEASE OVER AN EXTENT OF 2.48.0HA LOCATED AT CHENDARAPALLI VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 21.11.2023 AT 10.00 AM AT M/S. SRI MAHESHWARI MAHAL, D.NO. 1/190, NH-77, THIRUVANAMALLI MAIN ROAD, ANCHOOR VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. S. Sundara Rajan | : | Deputy Collector, Krishnagiri District. (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District. |
| 3 | Er. K. Ganesan., M.E., | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru. Mir Mazahar Ali | : | The Partner M/s. Zak Exports Grey Granite Quarry |
| 5 | Dr.Farid | : | The Partner M/s. Zak Exports Grey Granite Quarry |
| 6 | Thiru. Mir Tahar Ali | : | The Proponent Thiru. Mir Tahar Ali Grey Granite Quarry |
| 7 | Thiru. M. Sheik Nawas | : | EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions, Salem |

| | | | |
|---|---|---|---|
| | Public | : | 58 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Deputy Collector, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed projects of Grey Granite quarries of 1) M/s. Zak Exports Grey Granite Quarry, S.F.No. 380/1 (Part) lease over an Extent of 3.50.0 Ha located at Chendarapalli Village, Bargur Taluk, Krishnagiri District and 2) Thiru. Mir Tahar Ali Grey Granite Quarry, S.F.No. 380/1 (Part) lease over an Extent of 2.48.0 Ha located at Chendarapalli Village, Bargur Taluk, Krishnagiri District are required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as "Dinathanthi" and "The New Indian Express" dated 19.10.2023 and bit notices regarding public hearing was issued to the public of Anjur village, Goludur village, Kurumbarkuttai village and Chendrapalli village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Deputy Collector, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Deputy Collector, Krishnagiri has requested the project proponent to explain about their proposed Grey Granite quarry projects through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. M. Sheik Nawas, EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions, Salem of the proposed Grey Granite quarry projects has made presentation about the proposed Grey Granite quarry projects to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Grey Granite quarry projects. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Mohamad Zaman, Jagadevipalayam Village:**

Thiru. Mohamad Zaman has said that, we have no problem with this project and we support this project because employment will be created through this project.

**2. Thiru. Sasi Kumar, Nayakanur Village:**

Thiru. Sasi Kumar has said that, he is working as a driver in the quarry and that the youth of his village would get employment through this proposed project, so he welcomed the quarry project and wanted to start the quarry project soon.

**3. Thiru. Govindarajan, Chendarapalli Village:**

Thiru. Govindarajan has said that, the water bodies of the village will be affected by the proposed project and no quarry management is willing to provide employment to the local youth, and saplings are not planted around the quarry, and the movement of trucks in the roads without proper covering with tarpaulin is causing dust lead to air pollution and blasting in quarries has affecting school students. He also said that he would object to the proposed quarry project.

**4. Thiru. Krishnamoorthy, Nayakanur Village:**

Thiru. Krishnamoorthy has said that, the quarry project would provide employment to the local people and thereby increase their livelihood. Further, he welcomed the Quarry project.

5. **Thiru. Lakshman, Nayakanur Village:**

Thiru. Raman has said that, the proposed quarry project will provide employment to the local people and thereby it will increase their livelihood and requested that the proposed quarry project should be started soon.

6. **Thiru. Rada Krishnan, Jagadevipalayam Village:**

Thiru. Rada Krishnan has said that, as mentioned by Mr. Govindarajan, the quarry has not affected the nearby water bodies and M/s. Zak Exports Gray Granite Quarry has no role in that.

7. **Thiru. Syed Ahmed, Jagadevipalayam Village:**

Thiru. Syed Ahmed has said that, at present there is no blasting carrying out in the quarries and they use diamond saw to cut the granite stones. He also said that, the quarry project will provide employment to the local people.

8. **Thiru. Kannaiyan, Anjur Village:**

Thiru. Kannaiyan has said that, the local people will get employment through proposed quarry project. Further, he said that, the quarry trucks will affect the road, so he requested that the road should be improved with the financial assistance of the quarry.

**The Project Partner:**

The Project Partner has said that, ten percent of the total value of our quarry is provided to the DMTF fund, through which road and drinking water facilities are taken up in the district.

**Thiru. Kannaiyan, Anjur Village:**

Thiru. Kannaiyan has said that, funds are allocated for the development of all nearby villages but not for Anjur Panchayat. He asked to give priority to the road improvement and water facility in Anjur panchayat.

9. **Thiru. Devarajan, Anjur Village:**

Thiru. Deavarajan has mentioned that, the country will progress only if industry grows. He requested to provide RO drinking water facility to Anjur panchayat.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer , Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 4 number of petitions were received on the proposed projects of M/s. Zak Exports Grey Granite Quarry and Thiru. Mir Tahar Ali Grey Granite Quarry during public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Grey Granite Quarry projects.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

23/11/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

**Deputy Collector**
**Krishnagiri**

**District Collector**
**Krishnagiri**

1). தி/ள். Zak எக்ஸ்போர்ட்ஸ் கிரே கிரானைட் குவாரி, ச. எண். 380/1(பகுதி) செந்தாரப்பள்ளி கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப் பட்ட கிரே கிரானைட் குவாரி – 3.50.0 ஹெக்டர் பரப்பளவு மற்றும் 2) திரு. மீர்தாஹர் அலி கிரே கிரானைட் குவாரி, ச. எண். 380/1(பகுதி), செந்தாரப்பள்ளி கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட கிரே கிரானைட் குவாரி – 2.48.0 ஹெக்டேர் பரப்பளவு ஆகிய 2 எண்ணிக்கையிலான கூட்டு கிரே கிரானைட் கல் சுரங்கங்களை நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 21.11.2023 அன்று எண். 1/190, தே. நெ எண். 77, திருவண்ணாமலை மெயின் ரோடு, அஞ்சூர், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ மகேஷ்வரி மஹால், முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. S.சுந்தர ராஜன் | : | துணை ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம்.<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.K. கணேசன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு.மிர் மசாஹர் அலி | | பங்குதாரர்<br>தி/ள். Zak எக்ஸ்போர்ட்ஸ் கிரே கிரானைட் குவாரி |
| 5 | திரு. பாரித் | : | பங்குதாரர்<br>தி/ள். Zak எக்ஸ்போர்ட்ஸ் கிரே கிரானைட் குவாரி |
| 6 | திரு. மீர்தாஹர் அலி | | உரிமையாளர்<br>திரு. மீர்தாஹர் அலி கிரே கிரானைட் குவாரி, |

| | | | |
|---|---|---|---|
| 7 | திரு.M.ஷேக் நவாஸ் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம். |
| | பொதுமக்கள் | : | 58 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

1). தி/ள். Zak எக்ஸ்போர்ட்ஸ் கிரே கிரானைட் குவாரி, 2) திரு. மீர்தாஹர் அலி கிரே கிரானைட் குவாரி ஆகிய 2 எண்ணிக்கையிலான கூட்டு கிரே கிரானைட் சுரங்கங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த துணை ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்கள், பொதுமக்கள் மற்றும் 1). தி/ள். Zak எக்ஸ்போர்ட்ஸ் கிரே கிரானைட் குவாரி மற்றும் 2) திரு. மீர்தாஹர் அலி கிரே கிரானைட் குவாரி, ஆகிய 2 எண்ணிக்கையிலான கூட்டு கிரே கிரானைட் சுரங்கங்களின் உரிமையாளர்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 19.10.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், அஞ்சூர், கொலுடூர், குறும்பர்குட்டை, செந்தாரப்பள்ளி, நாயக்கனூர் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரிகளின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் கிரே கிரானைட் குவாரிகளின் திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு

விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

துணை ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் 1). தி/ள். Zak எக்ஸ்போர்ட்ஸ் கிரே கிரானைட் குவாரி மற்றும் 2) திரு. மீர்தாஹுர் அலி கிரே கிரானைட் குவாரி திட்டங்களின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரிகள் தொடர்பாக விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

1). தி/ள். Zak எக்ஸ்போர்ட்ஸ் கிரே கிரானைட் குவாரி மற்றும் 2) திரு. மீர்தாஹுர் அலி கிரே கிரானைட் குவாரி, நிறுவனங்களின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம். அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று கிரே கிரானைட் குவாரிகளின் திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. முகம்மது ஜமான், ஜெகதேவிபாளையம் கிராமம்:**

திரு. முகம்மது ஜமான் அவர்கள், இத்திட்டம் வருவதால் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றும், இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு உருவாகும் என குறிப்பிட்டார்.

**2. திரு. சசி குமார், நாயக்கனூர் கிராமம்:**

திரு. சசி குமார் அவர்கள், இக்குவாரியில் அவர் ஓட்டுநராக பணிபுரிவதாகவும் இத்திட்டத்தின் மூலம் தங்களுடைய கிராமத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் ஆகையால் இக்குவாரி திட்டத்தினை தாங்கள் வரவேற்பதாகவும் மற்றும் விரைவில் குவாரி திட்டத்தினை தொடங்கவேண்டுமென்று கூறினார்.

**3. திரு. கோவிந்தராஜன், செந்தாரப்பள்ளி கிராமம்:**

திரு. கோவிந்தராஜன் அவர்கள், குவாரி தொடங்குவதால் அவ்வூரில் நீர்நிலைகள் பாதிப்படையும் என்றும் எந்தவொரு குவாரி நிர்வாகத்தினரும் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க முன்வருவதில்லையென்றும், மற்றும் குவாரியை சுற்றி மரக்கன்றுகள் நடுவதில்லையென்றும் தார்பாய் கொண்டு முறையாக மூடாமல் கனரக வாகனங்களை இயக்குவதால் தூசு எழும்பி காற்று மாசு ஏற்படுவதாகவும் மற்றும் குவாரியில் வெடி வைப்பதால் பள்ளி மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் கூறினார். மேலும், உத்தேசிக்கப்பட்ட இக்குவாரிக்கு தான் ஆட்சேபனை தெரிவிப்பதாகவும் கூறினார்.

**4. திரு. கிருஷ்ணமூர்த்தி, நாயக்கனூர் கிராமம்:**

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இக்குவாரி திட்டத்தின் மூலம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்றும், அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் உயரும் என்று கூறினார். மேலும், இக்குவாரி திட்டத்தினை தான் வரவேற்பதாக கூறினார்.

**5. லக்ஷ்மணன், நாயக்கனூர் கிராமம்:**

திரு. லக்ஷ்மணன் அவர்கள், இக்குவாரி திட்டத்தின் மூலம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்றும், விரைவில் குவாரி திட்டத்தினை தொடங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

**6. திரு. இராதா கிருஷ்ணன், ஜெகதேவிபாளையம் கிராமம்:**

திரு. இராதா கிருஷ்ணன் அவர்கள், திரு. கோவிந்தராஜன் அவர்கள் குறிப்பிட்டது போல், குவாரியால் அருகிலுள்ள நீர்நிலைகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லையென்றும், அதற்கும் தி/ள். Zak எக்ஸ்போர்ட்ஸ் கிரே கிரானைட் குவாரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று தெரிவித்தார்.

**7. திரு. சையது அகமது, ஜெகதேவிபாளையம் கிராமம்:**

திரு. சையது அகமது அவர்கள், தற்போது குவாரிகளில் வெடி வைப்பது இல்லையெனவும், டைமண்ட் ஷா உபயோகப்படுத்தி கிரானைட் கற்களை வெட்டி எடுப்பதாக கூறினார். மேலும், இக்குவாரி திட்டத்தின் மூலம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்றும் கூறினார்.

**8. திரு. கண்ணையன், அஞ்சூர் கிராமம்:**

திரு. கண்ணையன் அவர்கள், இக்குவாரி திட்டத்தின் மூலம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்று கூறினார். குவாரியின் கனரக வாகனங்கள் சாலையில் செல்வதால் சாலை பாதிப்படையும் என்றும் ஆகையால்

குவாரியின் நிதி உதவியுடன் சாலையை மேம்படுத்தி தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**குவாரியின் உரிமையாளர்:**

குவாரியின் உரிமையாளர் அவர்கள், எங்களுடைய குவாரியின் மொத்த மதிப்பின் பத்து விழுக்காடு மாவட்ட DMTF நிதிக்கு வழங்கப்படுவதாகவும், அதன்மூலம் உள்ளூரில் சாலை மற்றும் குடிநீர் வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன என தெரிவித்தார்.

**8. திரு. கண்ணையன், அஞ்சூர் கிராமம்:**

திரு. கண்ணையன் அவர்கள், அருகிலுள்ள கிராமங்கள் அனைத்திற்கும் மேம்பாட்டு வளர்ச்சிக்கு நிதி ஒதுக்குவதாகவும் ஆனால் அஞ்சூர் பஞ்சாயத்திற்கு மட்டும் நிதி ஒதுக்கப்படுவது இல்லை என்று கூறினார். அஞ்சூர் பஞ்சாயத்தில் அமைந்துள்ள சாலையை மேம்படுத்தி தரவும் மற்றும் தண்ணீர் வசதியை அமைக்கவும் முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**9. திரு. தேவராஜன், அஞ்சூர் கிராமம்:**

திரு. தேவராஜன் அவர்கள், தொழில் வளர்ந்தால் தான் நாடு முன்னேறுமென்று குறிப்பிட்டார். அஞ்சூர் பஞ்சாயத்திற்கு RO குடிநீர் வசதி செய்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக்

கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள 1). தி/ள். Zak எக்ஸ்போர்ட்ஸ் கிரே கிரானைட் குவாரி மற்றும் 2) திரு. மீர்தாஹர் அலி கிரே கிரானைட் குவாரி திட்டங்களின் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 4 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், 1). தி/ள். Zak எக்ஸ்போர்ட்ஸ் கிரே கிரானைட் குவாரி மற்றும் 2) திரு. மீர்தாஹர் அலி கிரே கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரிகளின் திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

23/11/2023

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
ஓசூர்

துணை ஆட்சியர்
கிருஷ்ணகிரி மாவட்டம்

மாவட்ட ஆட்சியர்
கிருஷ்ணகிரி

5/7 5/7